1974 ஏப்ரல் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நூல்களைப் பொறுத்த மட்டிலும் அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுவினரே வாங்குகிறார்கள். அந்தக் குழுவில் பல்வேறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 25 அல்லது 30 பேர்கள் இருக்கிறார்கள். நூல்களை வாங்குவதில் தவறுகள் ஏற்படாமல் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்; பார்த்துக்கொள்கிறார்கள். நூலக இயக்குநரால் அனுமதிக்கப்பட்ட நூல்களையும் அவர்கள் வாங்குகிறார்கள். அரசு கொடுக்கிற உதவிப் பணத்தைக்கொண்டு இந்த இந்த வகையான நூல்களை வாங்கவேண்டும் என்று சொல்வதா அல்லது அந்தப் பணத்திற்கு புத்தகத்தை அரசாங்கமே வாங்கிக் கொடுத்துவிடலாமா என்பதைப்பற்றி ஆராய்ந்து சொல்லும்படி நிபுணர் குழு கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை வந்தபின்னால் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

வாங்குகின்ற புத்தகங்களில் குறைபாடுகள் இல்லாத அளவுக்கு இருக்கின்றனவா என்பதை மாவட்ட நூலகக் குழுவினர் பார்த்துக்கொள்ள வேண்டும் இப்போது வாங்குவதில் சில பல கோளாறுகள் இருக்கின்றன. நூல்களை வெளியிடுகின்றவர்கள் தங்கள் தங்கள் புத்தகங்களை வாங்கும்படி சிபாரிசு செய்கிறார்கள். அந்தப் புத்தகங்களில் புத்தக விலை 5 ரூபாய் என்றால் நூலகத்திற்குக் கொடுப்பதில் 8½ ரூபாய் என்று அச்சிட்டு அந்த விலைக்கு கொடுத்துவிடுகிறார்கள்.

ஆனால் அதே புத்தகம் வெளியில் 5 ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளும் இப்போது இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் போக்குகின்ற வகையில் நிபுணர் குழுவின் அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நூலகங்களின் பணியாளர்கள்.

* 744 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலா துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட நூலக ஆணைக் குழுவில் பணியாற்றி வரும் சிப்பந்திகளுக்கு அரசாங்க அலுவலர்களுக்குள்ள சலுகைகள் முழுவதும் அளிக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், அகவிலைப்படி, பண்டிகை முன்பணம் முதலியவை நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. பிற சலுகைகள் நிதி நிலை அடிப்படையில் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்தோறும் மாற்றத் திற்குரியனவாக உள்ளன.

Physical Education.

* 745 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to set up special cells for the promotion of Physical education in this State; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அனைத்து ஆசிரியர் பிரிவினர்களுக்கும் இப்போது செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுகிறது. ஆனால் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். செகண்டரி கிரேடு ஆசிரியருக்குத் தகுதி பெற்ற சிறப்பாசிரியர்களும் 10 வருடம் பணியாற்றியிருந்தால் தேர்வு-நிலையைப் பெறுவார்கள். அதிலே உடல் பயிற்சி ஆசிரியர்களும் வருவார்கள். ஆணையிலும் அது வரும்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, ஆசனப் பயிற்சி செய்வதால் உடல் வலிவு பெறுவது மட்டுமல்லாமல், சில வியாதிகளும் தீருவதாகச் சொல்கிருர்கள். குறிப்பாக சிரசாசனம் செய்தால் மாணவர்களுக்கு மூளை விருத்தியடைந்து புத்தி கூர்மையாகும். ஆகவே ஆசனப் பயிற்சிகளை கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உடற்பயிற்சிக் கல்லூரிகளில் ஆசனப் பயிற்சிக்கான பாடத் திட்டங்களை வகுத்து பயிற்சி அளிக்கிருர்கள். அங்கே பயிற்சி பெற்று வருகிறவர்கள் மாணவர்களுக்கு அந்த பயிற்சி முறைகளைக் கற்றுக்கொடுக்கிருர்கள். சிரசாசனப் பயிற்சியும் அதில் இடம்பெறும் என்று கருதுகிறேன். இப்போதே கூட சில பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசனப் பயிற்சி அளிக்கப்படுகிறது.